## டிசம்பர் - 16

**"நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனை பின்பற்றுங்கள்."**

**- 1இராஜா 18 : 21.**

நாம் ஒன்றை தீர்மானிக்க நமக்கு உதவி செய்யவும் விரைவாக ஒரு தீர்மானத்தை எடுக்க மனதை சாத்தியமாக்கவும் ஏதோ ஒரு உறைகல்லை, ஏதாவது ஒரு பொருளை உடையவர்களாய் இருப்பது நமக்குத் தேவையாயிருக்கிறது. எந்த விஷயம் சம்பந்தமாகவும் கர்த்தருடைய சித்தத்தைத் தெரிந்துக் கொள்ளுவது, தெரிந்து கொண்ட அவ்வளவு சீக்கிரத்தில் அதைக் குறித்து தீர்மானிக்கவும் உறைக்கல் ஒன்று வேண்டியதாயிருக்கிறது. இந்த உறைக்கல் தேவனுடைய சித்தமாக இருக்க வேண்டும். விரைவாகத் தீர்மானிக்கும் திறமைக்கும், எப்பொழுதும் சரியாகத் தீர்மானிக்கிறதற்கும் கர்த்தருடைய சித்தம் எதுவாயிருக்கிறது என்று அறிவதற்கும் கொஞ்சம் அனுபவமும் ஒழுங்கும் வேண்டியிருக்கிறது. ஆனால் சீக்கிரத்தில் இதைச் செய்ய ஆரம்பிக்கும் பொழுது சீக்கிரத்தில் இவ்விஷயத்தில் திறமை வாய்ந்தவர்களாகி விடுவோம். கர்த்தருடைய சித்தத்தை அறியவும் அதைச் செய்யவும், உடனடியாக அதைச் செய்வதில் சந்தோஷப்படுகிறோம் என்பதைக் காட்டவும் நாம் அதிக சுறுசுறுப்பாக உறுதிக்கொள்ளுவது அதிக நலமானதாயிருக்கும். வெகுசீக்கிரத்தில் நம்முடைய குணங்கள் சரியான வழிகளில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதை கண்டுகொள்ளுகிறோம்.

**- Z '02, 42 (R 2950).**

யேகோவாவுக்கு ஊழியம் செய்வது தனக்கும், உலகத்துக்கும் செத்து தேவனுக்கு ஜீவித்திருப்பதைக் குறிக்கிறது. மாம்சத்துக்கும், உலகத்துக்கும் கீழ்ப்படிய மறுத்து தேவனுக்குக் கீழ்படிகிறவனே தேவனுக்கு ஊழியஞ் செய்கிறான். பாகால் முக்கியமாக இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய சாத்தானைக் குறிக்கிறது. பாகாலுக்கு ஊழியம் செய்வது தனக்கும், உலகத்துக்கும், எதிராளிக்கும் ஜீவித்திருப்பதைக் குறிக்கிறது. மிகவும் விசேஷமாக பாகாலை சேவிக்கிறாவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ அதிகாரத்தைக் கைப்பற்றுகிறதினாலோ அல்லது மற்றவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் அவர்களுக்கு உதவிசெய்கிறதினாலோ, சாத்தானுடைய மாதிரியைப் பின்பற்றுகிறார்கள். தேவனுடைய ஜனங்களுக்கு தலைவர்களாயிருக்கிறவர்கள் இவ்வழிகளில் சோதிக்கப்படுவதற்காக சாத்தானுடைய முக்கியமான தாக்கப்படும் இலக்காக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட தலைவர்களில் சிலர் இந்த சோதனைக்கு அதிகமாகவோ, குறைவாகவோ இணங்கி இருக்கிறார்கள். நம்முடைய கர்த்தருடைய இரண்டாம் வருகையின் எப்பிபனி காலத்தின் விசேஷ சோதனை இவ்வழிகளில் இருக்கின்றன. உடனடியாக நாம் இதில் செயல்புரிவோமாக.

**- P '26, 173.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

யாத் 22:29; மத் 6:24; 8:21,22; 19:16-22; லூக் 9:61,62; அப் 24:25; யோசு 24:15; ஏசா 50:7; 1கொரி 15:58; 2பேது 1:10.

**கோபுர வாசிப்பு :** Z '13, 296 (R 5322).

**வினாக்கள் :** தீர்மானம் செய்ய அழைப்பதின் சம்பந்தமாக இந்த வார அனுபவங்கள் எவை? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவை விளைவித்த பலன் என்ன?